# பவுலும் பர்னபாவும் புதிய விசுவாசிகளை புதிய சபைகளுக்குள் கொண்டு வந்தனர்.

**ஜெபம்:** அன்பான பிதாவே! உமது மகனாகிய இயேசுவைப் பற்றி மற்றவர்களுக்கு நாங்கள் சென்று கூறும்போது நீர் மகிழ்ச்சி அடைகிறீர் என்பதை எங்கள் குழந்தைகளுக்கு எடுத்துக்காட்ட இந்தப் பாடத்தை உபயோகப் படுத்துவீராக.

சிறுவர்களின் வயதுக்கும் தேவைக்கும் ஏற்ற செயல்பாடுகளை தேர்ந்து எடுக்கவும்.

## 1. பவுலையும் பர்னபாவையும் பற்றி போதிக்க ஆயத்தம் ஆகுக.

பவுலும் பர்னபாவும் புதிய சபைகளை எவ்வாறு ஆரம்பித்தனர் என்பதை அப்.14ல் **காண்க.**



வேறொரு இடத்தில் புதிய பணிக்காகப் புறப்பட்ட பவுலையும் பர்னபாவையும் வழியனுப்ப அந்தியோகியா விசுவாசிகள் என்ன செய்தனர் என்பதை அப்.13:1-3 ல் காண்க (பதில் கேள்விகளுக்கு கீழே தரப்பட்டுள்ளது)

1) பவுலையும் பர்னபாவையும் அனுப்பிய சபை எந்தப் பட்டிணத்தில் இருந்தது?

2) அந்தியோகியாவில் உள்ள விசுவாசிகள் என்ன செய்ய வேண்டும் என்று பரிசுத்த ஆவியானவர் கூறினார்?

*(பதில்கள்*

*1) அந்தியோகியா, தற்போதைய துருக்கியில் இருந்த ஓர் பட்டிணம்.*

*2) பரிசுத்த ஆவியானவர் விசுவாசிகளிடம், தாம் அழைத்த ஒரு வேலைக்காக பவுலையும் பர்னபாவையும் பிரித்தெடுக்குமாறு கூறினார். இயேசுவைப் பற்றி அறியாத மக்களுக்கு இயேசுவைப் பற்றிய நற்செய்தியை அவர்கள் எடுத்துச் செல்ல வேண்டும் என்று அவர் விரும்பினார்.)*

அப்போஸ்தலர் 14:8-23ல் லீஸ்திராவில் நடந்த நிகழ்ச்சிகளைக் காண்க.

1) மக்களை ஆச்சரியப்பட வைத்த சம்பவம் என்ன?

2) முதன்முதலில், பவுலும் பர்னபாவும் யார் என்று மக்கள் நினைத்தனர்?

3) தங்களை வணங்காமல் மக்களைத் தடுக்க பவுலும் பர்னபாவும் என்ன செய்தனர்?

4) இன்னொரு பட்டிணத்தில் இருந்து வந்த மக்கள் தூண்டிவிட்ட பிறகு ஒரு கூட்டம் மக்கள் பவுலுக்கு என்ன செய்தனர்?

5) இயேசுவைப் பற்றிக் கூறுவதை பவுலும் பர்னபாவும் விட்டுவிட்டார்களா?

6) சீஷர்களுக்கு தலைவர்களை உருவாக்குவதற்காகப் பவுலும் பர்னபாவும் போவதற்கு முன் என்ன செய்தார்கள்?

*(பதில்கள்*

1) *பவுல் ஒரு ஊனமான மனிதனுக்கு இரட்சிப்புக்கேற்ற விசுவாசம் உண்டென்று அறிந்தார். அவனை தேவன் குணமாக்கினார்.*

2) *அவர்கள் பவுலை மெர்க்கூரி என்றும், பர்னபாவை யூப்பித்தர் என்றும் எண்ணினர்.*

3) *அவர்கள் ஜனங்களிடம் தாங்களும் மனிதர்களே என்றும் உயிருள்ள தேவனை வணங்குகிறவர்கள் என்றும் கூறினர்.*

4) *அவர்கள் பவுலை கல்லெறிந்து, பின் செத்து விட்டார் என்று கருதி பட்டிணத்துக்கு வெளியே இழுத்துச் சென்று போட்டனர்.*

5) *இயேசுவைப் பற்றி பவுலும் பர்னபாவும் தொடர்ந்து கூறினர்.*

6) *புதிய சபைகளை வழிநடத்த அப்போஸ்தலர்கள் மூப்பர்களை நியமித்தனர்.*

**2. சிறுவர்களின் வயதுக்கும் தேவைக்கும் ஏற்ற நடவடிக்கைகளைத் தெரிந்து கொள்க**

பவுலும் பர்னபாவும் லீஸ்திராவில் முடமானவனை சொஸ்தமாக்கியதையும், அதன் பின் நடந்த நிகழ்ச்சிகளையும் **ஒர் ஆசிரியரோ அல்லது பெரியபிள்ளையோ** கூறட்டும் (அப்.14:8-23)

முதல் பகுதியில் உள்ள கதையைப் பற்றிய கேள்விகளைக் கேட்கவும்.

அப்.14:8-23 ல் பவுலும் பர்னபாவும் செய்ததை **நாடகமாக்குக.** அதை ஆராதனையின் போது பெரியவர்களுக்கு நடித்துக் காட்டவும். எல்லாவற்றையும் அல்லது கதையின் ஒரு பகுதியை தேர்ந்து கொள்க. பெரிய பிள்ளைகள் ஆயத்தம் செய்வதில் சிறியவர்களுக்கு உதவுக.

- **பவுல், முடவன், கதைகூறுபவர்** பாத்திரங்களை பெரிய பிள்ளைகள் நடிக்கட்டும்.
- இளம் சிறுவர்கள் **பர்னபா, கூட்டம், கல்லெறிபவர்கள்** வேடங்களை ஏற்கட்டும்.

**கதைகூறுபவர்:** வசனம் 8 & 9 ஐ வாசிக்கவும்.

**பவுலும் பர்னபாவும்:** (முடவன் அருகே நடந்து போதல்).

**பவுல்** : "இயேசுவின் நாமத்தினால் நீ சொஸ்தமாகக் கடவாய்!"

**முடவன்** : குதித்து எழுந்து நடந்து சத்தம் போடுகிறான்" எனக்கு சரியாகி விட்டது"

**கூட்டம்** : வணங்கி கத்துதல், "கடவுள்கள் மனிதர்களைப் போல நம்மிடையே வந்துவிட்டனர்" " மெர்க்கூரியும் யூப்பித்தரும்" "மலர்வளையங்களை கொண்டு வா" "பலியிட மாடுகளைக் கொண்டு வா"

**பவுல்** : வசனம் 15ஐ சத்தம் போட்டு சொல்லுதல்

**கதை கூறுபவர்:** வசனம் 18,19 ஐ வாசிக்கவும்

**கல்லெறிபவர்கள்:** பவுலையும், பர்னபாவையும் சுட்டிக்காட்டி கோபமாக கத்துதல்.

"இந்த இரண்டு பேரும் உங்களை ஏமாற்றுகிறார்கள்"

"அவர்கள் பிசாசுகளினால் மாயவித்தை செய்கிறார்கள்"

"அவர்கள் உங்கள் கோயிலையும் சம்பிரதாயத்தையும் அழித்து விடுவார்கள்"

அவர்கள் கல்லெறிவது போல் நடிக்கிறார்கள். அவர் கீழே விழுகிறார்.

**கதை கூறுபவர்:** வசனம் 20-23 ஐ வாசித்து நாடகத்துக்கு உதவியவர்களுக்கு நன்றி கூறுகிறார்.

சிறுவர்கள் பெரியவர்களுக்கு இந்த நாடகத்தை **நடித்துக்** காட்டினால், அப்.14 ஐ பற்றி சில கேள்விகள் கேட்கலாம்.

விதை விதைத்த விவாசாயியைப் பற்றிய உவமையை செய்து காட்டுக, மாற்கு 4:1–20.

- ஒவ்வொரு குழந்தையின் கையிலும் ஒரு அரிசி மணியை அளிக்கவும் அல்லது ஒன்றை அவர்கள் பார்க்கும்படி காட்டுக.
- தம்மை ஏற்றுக்கொள்ளும் போது எவ்வாறு தமது இராஜ்யம் வளர்கிறது என்பதை இயேசு எவ்வாறு விதையைக் கொண்டு சித்தரித்தார் என்பதை விளக்குக. அவர், நாம் நல்ல நிலத்தில் விதைத்தால் அது வளர்ந்து பல மடங்கி பலனைந் தரும் என்று கூறினார்.
- நல்ல நிலம் கெட்ட நிலம் எவை என்பதை விளக்குக.
- பவுலும் பர்னபாவும் லீஸ்திரா மற்றும் பிற பட்டிணங்களுக்கு சென்ற போது அவர்கள் தேவ இராஜ்யத்தின் விதையை ஊன்றினார்கள். புதிய சபைகள் எழுந்தன. அவைகள் வேறு இடங்களில் மேலும் விதைக்க ஊழியர்களை அனுப்பின.

**கவிதை:** ஏசாயா 42:1, 4, 6, 7 வசனங்களை தலைக்கு ஒன்றாக நான்கு குழந்தைகள் வாசிக்கவும்.

**மனனவசனம்:** அப். 1:8

**ஜெபம்:** "கர்த்தாவே, பிறருக்கு நாங்கள் சுவிசேஷத்தை அறிவிக்கும் போது, பவுலையும் பர்னபாவையும் போல உண்மையும் தைரியமும் உள்ளவர்களாய் இருக்க எங்களுக்கு உதவி செய்யும். பிற இடங்களிலும் உள்ள மக்கள் இயேசுவை அறிந்து, உலகமெலாம் பரந்த கிறிஸ்துவின் சரீரமாகிய சபையின் ஓர் அங்கமாக மாற உதவி செய்யும்."

Copyright 2004 © by Paul-Timothy. May be freely copied.
Download from www.Paul-Timothy.net